**இலங்கைப் பாராளுமன்றம்**
**வெற்றிடம்**

---

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் காணப்படும் "**பாராளுமன்ற பணியாட்டொகுதிப் பிரதானி மற்றும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகம்" பதவியில்** நிலவும் வெற்றிடத்திற்கு சிறந்த உடலாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்த விண்ணப்பங்களை 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் '**பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே**' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '**பாராளுமன்ற பணியாட்டொகுதிப் பிரதானி மற்றும் பாராளுமன்ற பிரதிச்செயலாளர் நாயகம் பதவி**' என குறிப்பிடப்படுதல் வேண்டும். (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk என்ற இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.)

1. **பாராளுமன்ற பணியாட்டொகுதிப் பிரதானி மற்றும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகம் சம்பள அளவுத்திட்டம்:**
   2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 98,650 - 12 x 2,925 – 133,750/- ஆகும் (ஏனைய பிற மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 290,000.00).

2. **ஏனைய கொடுப்பனவுகளும் வசதிகளும்**
   i. சாரதியுடன் ஒரு உத்தியோகபூர்வ வாகனம்
   ii. வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கான வாய்ப்புகள்

3. **வயதெல்லை:**
   விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 40 வயதுக்கு குறையாமலும் 50 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. **கல்வித் தகைமைகள்:**
   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட சட்டமாணிப் பட்டம்.(LLB)

5. **தொழில்சார் தமைகமைகள்:-**
   ஆகக் குறைந்தது 10 வருடகால சேவைமூப்புடன் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக இருத்தல்.

6. **அனுபவம்:**
   அரசதுறையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறையில் மனிதவள முகாமைத்துவம்/பொது நிர்வாகத்துறை/வணிக முகாமைத்துவம் தொடர்பான உயர் முகாமைத்துவப் பதவியில் பத்து (10) வருட அனுபவம்.

   <u>கீழே காணப்படும் தகைமைகளில் ஒன்றை அல்லது அதற்கு அதிகமானவற்றை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்:-</u>

   *அ) அரசியலமைப்பு சட்டம், பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக சிறந்த அறிவு*
   *ஆ) பொது நிருவாகம் மற்றும் நிதிப் பிரமாணக்குறிப்புகள் தொடர்பாக சிறந்த அறிவு*
   *இ) சர்வதேச தொடர்பு தொடர்பான அனுபவம்*
   *ஈ) தகவல் தொழில்நுட்பத் திறன்கள்*
   *உ) நீதிமன்றச் சேவையில்/சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றிய அனுபவம்*
   *ஊ) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் திறன்*
   *எ) ஆறாம் பந்தியில் **அனுபவம்** தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு துறையில் முதுகலைப் பட்டப்படிப்பு தகுதி.*

7. **ஆட்சேர்ப்பு முறை**:

விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.

8. **சேவையில் அமர்த்தும் நியதிகளும் நிபந்தனைகளும்:**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் ஓய்வூதியம் தொடர்பாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு ஏற்ப இந்தப் பதவிக்கான ஓய்வூதிய முறைமை தீர்மாணிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். ஏற்கெனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அத்தகைய நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

(ii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அநாதைகள், விதவைகள் / தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

(v) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

9. கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்
(இ) தொழில்சார் தகைமைச் சான்றிதழ்கள்
(ஈ) அனுபவச் சான்றிதழ்கள்

10. அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள/ நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

11. இப் பதவியை பெற்றுக் கொள்வதற்காக ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இப் பதவிக்கான தகைமையீனமாக கருதப்படும்.

12. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்க பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் திணைக்கள தலைவர் ஊடாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் மற்றும் மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே
2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 25ஆம் திகதி